වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

Annual Report

2017

ජාතික ව්‍යවසාය සංවර්ධන අධිකාරිය

தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை

National Enterprise Development Authority

කර්මාන්ත කටයුතු අමාත්‍යාංශය

கைத்தொழில் அமைச்சு

Ministry of Industry





அறிமுகம்

சிறுதொழில் மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (எஸ்.எம்.இ) இலங்கைக்கு வசதியாக இந்த அமைப்பின் ஆணை 2006 ஆம் ஆண்டின் 17 ஆம் ஆண்டின் கீழ் நிறுவப்பட்ட தேசிய நிறுவன மேம்பாட்டு ஆணையம் (நெடா). உள்ளூர் நிறுவனங்களுக்கு உள்கட்டமைப்பு, நிதி மற்றும் கொள்கை அளவிலான ஆதரவை வழங்குவதன் மூலம் SMES ஐ அதிகாரம் செய்வதற்கான அதிகாரச் சட்டம் சட்டமியற்றுகிறது

வரி அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதலுடன் பிராந்திய மற்றும் தேசிய மட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரம், 2006 முதல் 2010 வரை முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் நிறுவன மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் NEDA பட்டியலிடப்பட்டது. தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் பட்டியலிடப்பட்ட NEDA & 2010 ஆம் ஆண்டில் வர்த்தகம் மற்றும் இது தொழில்துறை மற்றும் வர்த்தக அமைச்சகத்திலிருந்து இன்றுவரை நிர்வகிக்கப்படுகிறது

பொது மற்றும் தனியார் வங்கிகள், வணிக அறைகள் அரசு சாரா நிறுவனங்கள் (உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் போன்ற பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடனான SME சமூக தொடர்புகளுக்காக பிரதேச செயலக மட்டத்திலிருந்து பல்வேறு திட்டங்கள், திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளை NEDA துவக்கியது. இந்த திட்டங்களின் நோக்கங்கள் நிதி உதவி, அடிமட்ட அளவிலான SME க்களுக்கான பயிற்சி ஆலோசனை ஆதரவு போன்ற அடிப்படை தேவைகள். DS பிரிவு மட்டத்தில் SME களை ஒருங்கிணைக்க பிரதேச செயலகம் (DS) மட்டத்தில் பிராந்திய அளவிலான அதிகாரிகள் இருந்தனர்.



தொலைநோக்கு

"நாட்டின் பொருளாதார அரசியல் மற்றும் சமூக தேவைக்குப் பங்களிப்புச் செய்யும்வகையில் சக்திவாய்ந்ததும், நிலைபேறானதுமான ஒரு போட்டித்தொழில் முயற்சித் துறையினரை உருவாக்குதல்."

பணிக்கூற்று

"இலங்கையின் தேசிய பொருளாதாரத்தினை பூரணமாக்குவதற்குத் தேவையான தே.தொ.அ.அ.இனது (நேனுயு) தொழில் முயற்சியாண்மைகளின் அபிவிருத்தி, வளர்ச்சி மற்றும் போட்டித்தன்மைகளினை வசதிப்படுத்துவதும், தூண்டுதலுக்குமான ஒத்தாசையை வழங்கல்."

நோக்கங்கள்

இலங்கைக்குள் சிறிய, நடுத்தர (ளுஆநு) அபிவிருத்திகளை ஊக்குவித்தல், தரமுயர்த்துதல் மற்றும் வசதிப்படுத்துவதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தின் வளர்ச்சி, விரிவாக்கல் மற்றும் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்.

தே.தொ.அ.அ.இன் (நேனுயு) சட்டத்தின் நோக்கங்களை அடையுமுகமாக உள்நாட்டுத் தொழில் முயற்சிகளினைச் சர்வதேசத்திற்கும், வெளிநாட்டுச் சந்தைக்கும் ஏற்றவிதமாக உட்புகுத்தும் நோக்கத்துடன் தொழில்முயற்சி வடிவமைப்பினை இலங்கைக்கு வெளியே தாபிப்பதையும், தொழிற்படுத்துவதனையும் ஊக்கமளித்துத் தூண்டுதல்.

கைத்தொழில் மற்றும் விவசாயத்திலான வியாபாரத்தினையும், அபிவிருத்தியினையும் கருத்தில்கொண்டு கொள்கை, திட்டம், உயர்வான ஊக்குவிப்பினை பொருத்தமான முறையில் வடிவமைப்பதுடன் வினைத்திறமையான ஒத்துழைப்பினையும், ஊக்குவிப்பினையும் வழங்கல்

தொழில்நுட்பத்திறனுடன்கூடிய மனித மூலதன அபிவிருத்தியில் மக்களின் அதிகாரமளித்தலை தொழில்முயற்சி அபிவிருத்தியினது ஒரு அவசியமான அங்கமாக்குதல்.

அபிவிருத்தித் தேவைகளைச் சந்திப்பதற்கு வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்திசெய்தல்.

தொழில்முயற்சி, அபிவிருத்தி மற்றும் தொழிற்பாட்டிற்குத் தேவையான நிதிவசதியினை தொழில்முயற்சியாளர்களின் மூலமாகப்பெற ஏற்பாடுசெய்தல்.

உற்பத்தி, அபிவிருத்தி, தொழில்நுட்பவியல் தரமுயர்த்தல் மற்றும் வியாபாரக்குறி வர்த்தகமயமாக்கலுடன் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை உயர்ந்த நிலைக்கு மாற்றுவதற்கு ஒரு தொழில்நுட்பவியல் அபிவிருத்தி நிதியினைத் தாபித்தல்.

பிராந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல்.

· பணிப்பாளர் சபை

1. திரு. ஓமர் காமில் - தலைவர் ∴ பணிப்பாளர் நாயகம்.

2. திரு. எஸ். பாலசுப்பிரமணியம் - பணிப்பாளர் சபை உறுப்பினர்,
மேலதிகச் செயலாளர் திட்டமிடல் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு.

3. ஏச். ஏ. தாரக்க எறண்டி அவர்கள் - பணிப்பாளர் சபை உறுப்பினர்,
உதவிப் பணிப்பாளர் பொதுநிதிகள் திணைக்களம்.

4. திரு. சஞ்சீவ சிக்வெல்ல - பணிப்பாளர் சபை உறுப்பினர்.

5. திரு. எம்.எஸ். மொஹமட் நதீர் - பணிப்பாளர் சபை உறுப்பினர்.

6. திரு. எஸ். ஆனந்தராசா - பணிப்பாளர் சபை உறுப்பினர்.

7. திரு. டீ.கே. போகொல்லகம - பணிப்பாளர் சபை உறுப்பினர்.

2022 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி

கௌரவ விமல் வீரவன்ச

கைத்தொழில் அமைச்சர்,

கைத்தொழில் அமைச்சு,

இல. 73.்.1 காலி வீதி,

கொழும்பு- 03.

கௌரவ ஐயா,

<u>வருடாந்த அறிக்கை 2017</u>

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)ஆம் பிரிவின்படி, 2017ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையுடன் சம்பந்தமாக பின்வரும் ஆவணங்களினை நான் சமர்ப்பிக்கின்றேன்.

01) தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2017ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை.

02) 31 டிசம்பர் 2017 அன்றுள்ளபடியான ஐந்தொகை, 31 டிசம்பர் 2017இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவுக்கூற்று மற்றும் 31 டிசம்பர் 2017இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்று.

03) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை.

தங்கள் உண்மையுள்ள,

சுனில் ஜயரத்ன

தலைவர்.்.பணிப்பாளர் நாயகம்.

வருடாந்த அறிக்கை 2017

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

1.0 தகவல் பரிமாற்றம்.

2.0 நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாண்மைகளின் அடிப்படைத் தகவல்களைத் தயாரித்தல்.

3.0 வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களின் இயலுமை அபிவிருத்தி.

4.0 பிராந்திய தொழில்முயற்சியாளர்களின் விருதுவழங்கல் விழாக்கள்.

5.0 மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள்.

6.0 பிரச்சினைகளைக் கையாளல்.

7.0 கொள்வனவாளர்கள் - விற்பனையாளர்கள் சந்திப்பு (மாகாண மட்டத்தில்.)

8.0 தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - மொறட்டுவ தொகுதி.

9.0 பொதிசெய்தல் உதவி தேவைப்படும் பிராந்திய தொழில் முயற்சியாளர்களுக்கு வசதி செய்துகொடுத்தல்.

10.0 பிராந்திய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

11.0 பெண்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

12.0 'உபாதிதாரி வியாவாசயக உதானய' நிகழ்ச்சித்திட்டம்.

13.0 பரீட்சித்துப்பார்த்தல் தொழில்நுட்ப பரிமாற்றல் நிலையம்.

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017

நிகழ்ச்சித்திட்டம் 1.0: நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாண்மைகளுக்கான வழிகாட்டி நூலினைத் தாயாரித்தல்.

தே.தொ.அ.அ.வானதுஇ நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்காகவும், வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளர்களுக்காகவும் வழிகாட்டி நூலினை வெளியிட்டுள்ளது. இது இயந்திர வழங்குநர்கள், வியாபார ஆலோசனை நிறுவனங்கள், பயிற்சியளிப்போர் மற்றும் ஏனைய வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளர்களின் விபரங்களை உள்ளடக்கியுள்ளது. இது தொழில்முயற்சியாளர்கள் வெற்றிகரமான தொழில்முயற்சியினைத் தாபிக்க வழிகாட்டும் ஒரு பயனுள்ள ஆவணமாகக் காணப்படும். கிட்டத்தட்ட 200 பக்கங்கள்.

நிகழ்ச்சித்திட்டம் 2.0: நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின்இ அடிப்படைத் தரவுகளைத் தயாரித்தல்.

தே.தொ.அ.அ.வானது, நுண் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாண்மைகளின் அடிப்படைத் தரவுகளை பிரதேச செயலக மட்டத்தில் பேணி வருவதுடன் அதனை ஆண்டுதோறும் இற்றை வரைப் படுத்துகின்றது. இது பிராந்தியப்பகுதிகளில் தொழிற்படும் நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்களின்இ தொடர்பு விபரங்களை உள்ளடக்கியுள்ளது.

நிகழ்ச்சித்திட்டம் 3.0: வியாபார அபிவிருத்திச்சேவை வழங்குநர்களின் இயலுமை அபிவிருத்தி.

வேலையற்றோர் மற்றும் நுண், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரச் சமூகம் உள்ளிட்ட தொழில்முயற்சியாளர்களுக்கு மாத்திரமல்லாமல், வாடிக்கையாளர்களை அடையும் உயர்தர ஆலோசனை வழிகாட்டல் ஒத்துழைப்பு மற்றும் பயிற்சியளித்தல் சேவைகளை வழங்குமுகமாக உள்ளூர் சமூகத்துடன் வியாபார அபிவிருத்திச் சேவையானது கருமமாற்ற வேண்டும். இந்தச் சேவைகளாவன வியாபார அபிவிருத்திச் சேவைகளை வழங்கும் தனியாள் ஆலோசகர், அதேபோல நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன. தொழில்முயற்சியாளர்களுக்கு வியாபாரத்தை ஆரம்பித்தல், விரிவுபடுத்தல், ஏற்றுமதிசெய்தல், நிதியளித்தல், கல்வி அல்லது பயிற்சியளித்தல் மற்றும் ஏனைய வியாபார அபிவிருத்திச் சேவைகள் தேவைப்படுகின்றன.

ஆயினும் தொழில்முயற்சியாளர்களுக்கு அபிவிருத்திச் சேவைகளை ஏற்பாடுசெய்ய திருப்தியான பொறிமுறை காணப்படவில்லையென்பதுடன் தொழில் முயற்சியாளர்களுக்கும் வியாபார அபிவிருத்திச் சேவை வழங்குநர்களுக்குமிடையில் வலைப்பின்னல் தொடர்பு காணப்படவுமில்லை என்பதாகும். இதற்கும் மேலாக, சில வியாபார அபிவிருத்திச் சேவை ஏற்பாட்டாளார்கள் தரமான சேவைவழங்கப் போதிய இயலுமையற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

2017ஆம் ஆண்டில், தே.தொ.அ.அ.வானது, வியாபார அபிவிருத்திச்சேவை ஏற்பாட்டாளர்களிடமி:ருந்து தேவை மதிப்பீட்டினை நடாத்தியதுடன், அவர்களுக்கான தேவைகளை அடையாளம் கண்டுள்ளது. இதனை அடிப்படையாகக்கொண்டு 2018ஆம் ஆண்டில் வியாபார அபிவிருத்திச்சேவை ஏற்பாட்டாளர்களுக்கு இயலுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை (மனிதவள அபிவிருத்தி) நடாத்த தே.தொ.அ.அ.வானது, விரும்புகின்றது.

நிகழ்ச்சித்திட்டம் 4.0: பிராந்திய தொழில்முயற்சியாளர் விருதுவழங்கும் விழா.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஆழமான பங்களிப்பினைச்செய்த தொழில் முயற்சியாளர்களினை அடையாளம் காணல், ஊக்கமளித்தல் மற்றும் உந்துசக்தியளித்தல் ஆகிய நோக்கங்களுடன் தொழில்முயற்சியாளர் விருது வழங்கும் விழாவினை தேசிய தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையானது நடாத்துகின்றது. தே.தொ.அ.அ.வானது, மாவட்ட மன்றங்கள், அரசாங்க நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் எல்லா மாவட்டங்களிலுமாக, ஒன்பது விருதுவழங்கல் விழாக்களினை நடாத்தியது.

நிகழ்ச்சித்திட்டம் 5.0: மாவட்ட மற்றும் பிராந்திய தொழில்முயற்சிக் குழுக்கள்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் தொழில்முயற்சியாளர்களுக்கு, வியாபார அபிவிருத்திச்சேவைகளை ஏற்பாடுசெய்யுமுகமாக பொருத்தமான பொறிமுறையினை அபிவிருத்திசெய்யுமுகமாக மாவட்ட தொழில்முயற்சியாளர் குழுக்கள் மற்றும் பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களானவை தாபிக்கப்பட்டுள்ளன. இது மாவட்டத்தின் அரசுசார்பான, அரசுசார்பற்ற வியாபார அபிவிருத்திச்சேவை (விஅ.சே) வழங்குநர்கள், மன்றங்கள் மற்றும் வர்த்தக வியாபார கழகங்களினை உள்ளடக்கியுள்ளது. தே.தொ.அ.அ.வானது மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டத்தில் மாவட்ட மற்றும் பிராந்திய தொழில் முயற்சியாளர் குழுக்களைத் தாபிக்கத் திட்டமிட்டுள்ளது. மாவட்ட தொழில்முயற்சியாளர் குழு மற்றும் பிராந்திய தொழில் முயற்சியாளர் குழுக்களின் நோக்கங்கள்:-

- பிரதேச செயலாளர் மட்டத்தில் வியாபார அபிவிருத்திச்சேவை ஏற்பாட்டாளர்களிடையேஇ உறவுமுறையினைக் கட்டியெழுப்புதல்.

- பொது, தனியார் கலந்துரையாடலுக்கு வசதிசெய்தல்.

- மாவட்ட தொழில்முயற்சியாளர் குழுக்கள்இ பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள்இ மற்றும் சிறிய, நடுத்தர, தொழில்முயற்சியாளர்இ குழுக்களுக்கிடையில் பொருத்தமான தொடர்பாடலைத் தாபித்தல்.

- மாவட்ட பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்களினூடாக தொழில்முயற்சி யாளர்களுக்கு வியாபார அபிவிருத்திச் சேவைகளைஇ வழக்கும் ஒரு முறைமையினை அபிவிருத்திசெய்தல்.

- பிரதேச செயலாளர் மட்டக் குழுவிலிருந்து தேசியமட்டக் குழு வரை, இக்குழுக்களிலிருந்து வியாபாரப் பிரச்சினைகளைச் சேகரித்தலும், தீர்வுக்கான நடவடிக்கைகளை எடுத்தலும்.

- 2017ஆம் ஆண்டுவரை, தீவு பூராகவும் 173 பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள்இ தாபிக்கப்பட்டுள்ளதுடன், கூட்டங்கள் ஒழுங்காக நடைபெறுவதுடன்இ தீவு பூராகவும் 13 மாவட்ட தொழில்முயற்சியாளர் குழுக்கள்இ தாபிக்கப்பட்டுள்ளன.




அனுராதபுரத்திலான பிராந்திய தொழில்முயற்சியாளர் குழுக்கள்.

நிகழ்ச்சித்திட்டம் 6.0: பிரச்சினைகளைக் கையாளல்.

பிரச்சினைகளைக் கையாளும் மென்பொருளானது, சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர் பிரிவிலான பிரச்சினைகளைக் கையாளுவதுடன் ஒன்று என்பதுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அதனைப் பொருத்தமான நிறுவனங்களுக்கு அறிக்கையிடுவதற்குமான ஒரு கருவியாகும். இந்த முறையினைத் தொழிற்படுத்த 'ஸ்ரீலங்கா ரெலிகொம்' உடன் கூடிய, தனியாள் சேவை வழங்கும் கூட்டொன்று தே.தொ.அ.அ.இல்இ காணப்படுகின்றது. தே.தொ.அ.அ.வானது, பிரச்சினைகளைக் கையாள்வதனை அபிவிருத்திசெய்துள்ளதுடன் தீர்வுகாணப்படாத பிரச்சினைகளை தெரிவுசெய்யப்பட்ட மாவட்டத்தில் முன்னோடித் திட்டமாக முன்கொண்டு செல்கின்றது. (களுத்துறை, அம்பாந்தோடடை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்கள்).



யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி.

நிகழ்ச்சித்திட்டம் 7.0: வாங்குவோர் விற்போர் கூட்டம் (மாகாண மட்டம்)

நிலைபேறானதும், நியாயமானதுமான பொருளாதார வளர்ச்சிக்கு, வினைத்திறைமையான பங்களிப்பினைச் செய்வதற்கு, தொழில்முயற்சியாளர்களின் இயலுமையினை வரையறைசெய்வதாக அநேக காரணிகள் காணப்பபடுகின்றன. இவற்றில் சில காரணிகள் நன்கு அறிந்ததும், பின்வருவனவற்றை உள்ளடக்கியதுமாக காணப்படுகின்றன் தொழில்முயற்சியிலான அறிவு மற்றும் திறன் குறைபாடு, மூலதனக் குறைபாடு, சொத்து, மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் குறைபாடு, சந்தைகளுடனான நேரடிச் சந்திப்புகளை மேற்கொள்ளலினான வரையறை, தொழில்நுட்பத் திறன் போதாமை ஆகியன.

தே.தொ.அ.அ.வானது, இந்தக் காரணிகளைப் பிரதானமாகக்கொண்டு சேவைகளை வழங்குகின்றது. 2017ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானதுஇ தொழில்முயற்சியாளர்கள் பொருத்தமான வாங்குவோர்களுடன் நேரடித்தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக வாங்குவோர், விற்போர் கூட்டங்களை மாகாணமட்டத்தில் ஏற்பாடுசெய்து நடாத்தியது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலமாக உற்பத்தியாளர்கள் அடையாளம் காணப்படுவதுடன், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலமாக அடையாளம் காணப்பட்ட உற்பத்தியாளர்களின் பட்டியலினை அடிப்படையாகக்கொண்டு தே.தொ.அ.அ.வானது, வாங்குவோர்களை அடையாளம் காண்கின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தே.தொ.அ.அ.வானது, கம்பஹா மற்றும் கண்டி மாவட்டங்களில் விற்போர், வாங்குவோர் கூட்டங்களை நடாத்தியதுடன், 200 உற்பத்தியாளர்களை வாங்குவோர்களுக்கு அறிமுகம்செய்து வைத்தது.

நிகழ்ச்சித்திட்டம் 8.0: தொகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - மொறட்டுவ தொகுதி.

தே.தொ.அ.அ.வானது, மொறட்டுவ மரத்தளபாட தொழில்முயற்சியாளர்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் ஈடுபாடுகொண்டுள்ளது. தே.தொ.அ.அ.வானது, சந்தை அபிவிருத்தி தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, தொழில்நுட்பம் பரிமாற்றல் மற்றும் நிதிஉதவிகள்

ஆகியவற்றிலான களத்தில் இவர்களின் இயலுமையினை விருத்திசெய்ய விரும்புகின்றது. மொறட்டுவ மரத்தளபாட கழகங்கள் இந்தச் செயற்பாட்டுடன் ஈடுபாடு கொண்டுள்ளதுடன், அவர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் குறுகியகால, நீண்டகால நன்மைகளை எதிர்பார்க்கின்றனர்.

2017ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானது, தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை, 25 தொழில்முயற்சியாளர்களுக்கு - (தச்சுவேலையாட்கள்) நடாத்தியதுடன் நிதி உதவிகளுக்கும் வசதிசெய்து கொடுத்தது.



நிகழ்ச்சித்திட்டம் 9.0: பொதியிடல் உதவி தேவைப்படும் பிராந்திய தொழில்முயற்சியாளர்களுக்கு வசதிசெய்துகொடுத்தல்.

தே.தொ.அ.அ.வானது நுண், சிறிய, நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு 'சுப்பர் மார்க்கட்' களுக்கான வழங்குநர்களாக தகுதிபெறுவதனை வசதிசெய்யும்பொருட்டு, அவர்களை 'சுப்பர் மார்க்கட்' களுக்கு அறிமுகம்செய்து வைக்கின்றது. எனவே, தே.தொ.அ.அ.வானது, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் உத்தேச வழங்குநர்களை அடையாளம் காண்பதுடன், அவர்களின் உற்பத்திகளின் தரம் மற்றும் வழங்கும் இயலுமை ஆகியவற்றினை மதிப்பீடு செய்கின்றது. தே.தொ.அ.அ.வானது, தொழில்நுட்பப் பயிற்சியளித்தலினை ஏற்பாடுசெய்வதன் மூலம் உற்பத்திகளின் தரத்தினை உயர்த்துவதற்கு ஒத்தாசை வழங்குகின்றது.

2017ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானது, கேள்வியினை அடிப்படையாகக்கொண்டு, 213 தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியளித்தலினை, 03 மாவட்டங்களில் (கம்பஹா களுத்துறை மற்றும் புத்தளம்) ஏற்பாடுசெய்தது.





கம்பஹாவினான பயிற்சியளித்தல் நிகழ்ச்சி.

நிகழ்ச்சித்திட்டம் 10.0: பிராந்திய தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

தே.தொ.அ.அ.வானது, இலய்கையின் பொருளாதாரத்தில், மாகாண மட்டத்தில் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது. தொழில்முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம் நிதிமுகாமைத்துவம் ஆகியவற்றில் தொழில்முயற்சியாளர்கள் அறிவு குறைந்தவர்களாக உள்ளமையினை, தே.தொ.அ.அ.வானது, அடையாளம் கண்டுள்ளது. அவர்கள் வியாபாரத்தைத் தொடங்கவோ தங்களின் வியாபாரத்தை விரிவுபடுத்தவோ நிதித்தடைக்கு முகம்கொடுக்கின்றார்கள். தே.தொ.அ.அ.வினது, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிராந்திய மட்டத்தில் பணிபுரிவதுடன், மேற்படி அறிவு மற்றும் திறன் ஆகியன தேவைப்படும் இந்த தொழில்முயற்சியாளர்களை இவர்கள் அடையாளம்காண்கின்றனர்.

எனவே, தே.தொ.அ.அ.வானது, சிறிய பயிற்சியளித்தல் மற்றும் தொடர்ந்துசெல்லும் சேவைகளினை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் எல்லா மாவட்டங்களிலும் பிராந்திய மட்டத்தில் இந்த தொழில்முயற்சியாளர்களுக்க நடாத்திவருகின்றது. தே.தொ.அ.அ.வானது, செயற்றிட்டத் தீர்மானங்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் களிடமிருந்து பெற்றுக்கொள்கின்றது.

2017ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ.வானது, பிராந்திய மட்டத்தில் 7,100 தொழில் முயற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்துள்ளது.





குருணாகலில் பயிற்சியளித்தல்.

நிகழ்ச்சித்திட்டம் 11.0: பெண்கள் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

இலங்கைப்பெண்கள், நாட்டின் வியாபாரத்துறையில் துடிப்பான பங்களிப்பினை அண்மைக்காலத்தில் எடுத்துள்ளனர். ஏப்படியாயினும் அவர்கள் வியாபாரக் களத்தில் ஆண்களுடன் போட்டியாக சரிசமமாக போட்டித்தன்மையுடன் காலூன்றி நிற்கின்றமை தெரிகின்றது. ஆயினும் ஒப்பீட்டளவில் பெண்கள் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை இந்த வரிசையில் குறைவாகவே காணப்படுகின்றனர். எப்படியாயினும் இந்த நிலைமை தற்போது மாறிக் காணப்படுவதுடன் நாட்டின் பொருளாதார விடயத்தில் இலங்கைப் பெண்கள் கணிசமானளவு பங்களிப்புச் செலுத்துவதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் காணப்படுகின்றன. விசேடமாக இலங்கையின் வியாபாரத்துறையானது கடந்த சில தசாப்தகாலத்தின்போது, ஆண்களுக்கும் மேலாக கணிசமானளவு பெண்களின் முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. பெருமளவான பெண்கள் தங்களின் சொந்த வியாபாரத்தினை ஆரம்பித்துள்ளதுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் வெற்றி வாய்ப்பினைச் சந்திக்கக்கூடியவர்களாகவும் உள்ளனர். ஆயினும் அவர்கள் தொழில்முயற்சியாண்மை, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் ஆகியவற்றில் மிகவும் குறைந்த அறிவுடையவர்களாக உள்ளனர். அத்துடன் தங்களின் சொந்த வியாபாரத்தைத் தொடங்கவோ ∴ விரிவாக்கவோ நிதித் தடைகளைச் சந்திக்க வேண்டியிருந்துள்ளனர். எனவே தே.தொ.அ.அ.வானது அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் எல்லா மாவட்டங்களிலும் பிராந்திய மட்டத்தில் பெண்கள் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுலாக்குகின்றது.

2017ஆம் ஆண்டில், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தே.தொ.அ.அ.வானது, மாகாணமட்டத்தில் 6,200 பெண்கள் தொழில்முயற்சியாளர்களுக்கு பயிற்சியளித்துள்ளது.





குருணாகலில் பயிற்சியளித்தல்

நிகழ்ச்சித்திட்டம் 12.0: 'உபாதிதாரி வயவசயக உதானய' நிகழ்ச்சித்திட்டம்.

தே.தொ.அ.அ.வானது, இலங்கையில், நாட்டின் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர் பிரிவினரை விசேட கவனத்தில்கொண்டு தொழில்முயற்சி அபிவிருத்திக்கு, அதனை மேம்படுத்தல், ஒத்துழைப்பு, ஊக்குவித்தல் ஆகியவற்றைச் செய்கின்றது. இது தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி, நிதி வசதியளித்தல், சந்தை தொடர்பு, ஆராய்ச்சி

மற்றும் அபிவிருத்தித் தொழில்முயற்சியாளர்களுக்கான உள்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றினை, தொழில்முயற்சியாளர்கள் மற்றும் வியாபார அபிவிருத்தி சேவை வழங்குநர்களுக்கு ஏற்பாடுசெய்கின்றது.

தே.தொ.அ.அ.வானது, பட்டதாரிகளுக்கு வியாபாரத்தினை ஊக்குவிப்பதற்காக, 'உபாதிதாரி வயவசயக உதானய' என்னும் பெயரிலான வியாபாரக்களத்தில் அவர்களை இணைத்துக்கொள்ளுமுகமாக பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை நடாத்துகின்றது.

நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்:

தேசிய தொழில்முயற்சியாளர் அபிவிருத்தி அதிகாரசபை, மற்றும் பல்கலைக்கழகம்.

இலக்குவைக்கப்படுபவர்கள்:

வியாபாரக் களத்தில் அக்கறையுள்ள பல்கலைக்ககழக இறுதியாண்டு மாணவர்கள்.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடான வசதிகள்:

- இயலுமை அபிவிருத்திப் பயிற்சியளித்தல் (தொழில்முயற்சியாண்மை, அபிவிருத்தி வியாபார முகாமைத்துவம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன)

- தொழில்நுட்பவியல் கைமாற்றல் (தேவைப்பாடடினைப்பொறுத்து)
- சந்தைத் தொடர்பு.
- வியாபாரத்தைத் தொடங்குதல் விரிவுபடுத்தல்.
- விற்பனைக்கு காட்சிப்படுத்தலைச் சென்றுபார்வையிடுதல்.
- வியாபார ஆலோசனை வழங்குதலும், அதனைத் தொடர்ந்து செல்லுதலும்.

2017ஆம் ஆண்டில் தே.தொ.அ.அ. வானது, 186 பட்டதாரிகளுக்கு தொழில்முயற்சியாளர் அபிவிருத்திப் பயிற்சியளித்தலினை நடாத்தியதுடன், 61 பட்டதாரிகளுக்கு உதவிகளையும் வழங்கியது.



றுஜறட்ட பல்கலைக்கழகம் விழிப்புணர்வு நிகழ்ச்சி.



நிதியளித்தல் ஏற்பாடுசெய்தல்

நிகழ்ச்சித்திட்டம் 13.0: பரீட்சித்துப்பார்த்தல் தொழில்நுட்ப கைமாற்று நிலையம்.

தே.தொ.அ.அ.வானது, இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் 'மாகடுறவில்' தகவல் தொழில்நுட்ப நிலையத்தினைத் தாபித்துள்ளது. இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கமானது அப்பகுதியிலுள்ள நுண் மற்றும் சிறிய கைத்தொழில் சாலைகளுக்கு வசதிசெய்து கொடுப்பதும் பல்கலைக்கழகங்களிலிருந்து சித்தியடைந்து வெளியேறும் பட்டதாரிகளுக்கு அவர்கள் தங்களின் சுய திடகாத்திர நிலைக்கு வளரும்வரை வியாபாரத்தினைத் தொடங்குவதற்கும் ஆகும். தே.தொ.அ.அ.வானது, கௌரவ பிரதம மந்திரியின் முன்னிலையில் ஆகஸ்ட் மாத முடிவில் இந்த நிலையத்தைத் திறந்துவைக்கின்றது.



டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான விரிவான வருமானக்கூற்று

	குறிப்பு	2017 ரூ.	2016 ரூ.
நிகழ்ச்சித்திட்டத்திற்கான மானியங்களின் பயன்பாடு			
ஆண்டிற்குரிய மானியம்	16	37,631,641	31,614,270
நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவுகள்	9	37,631,641	31,614,270
நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமாக எழுந்த மிகை.∴(குறை)		-	-
செயற்பாடு			
பொது திறைசேரியிலிருந்து மீண்டுவரும் மானியம்		19,609,491	19,202,159
அரச மானிய இழப்பு	14	3,074,050	5,631,434
பிற வருமானம்	7	28,287,093	18,548,872
மொத்த வருமானம்		**50,970,633**	**43,382,465**
நிர்வாக செலவுகள்	8	23,536,262	25,333,872
ஏனைய கருத்திட்ட செலவுகள்	9	62,026	44,000
மொத்த செலவுகள்		**23,598,288**	**25,377,872**
வருடத்திற்கான தேறிய மிகை ∴ (குறை)		**27,372,346**	**18,004,593**

டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	2017 ரூ.	2016 ரூ.
சொத்துக்கள்			
நடைமுறையல்லா சொத்துக்கள்			
சொத்து, கட்டிடம் மற்றும் உபகரணம்	10	10,097,481	11,988,452
நடைமுறை சொத்துக்கள்			
பெறுகைகள்	11	322,395	
-			
வைப்புக்களும் முற்பணங்களும்	12	115,835,183	30,890,400
முற்பண செலவுகள்	13	63,916	83,187
பண்டிகைக்கான முற்பணங்கள்		10,250	10,000
அபாய கடன்		2,039,356	
காசு மற்றும் காசுக்கு சமனானவை		2,308,452	18,498,850
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**120,579,552**	**49,482,436**
டீ. எக்ஸ்பிரஸ் லிமிடட்		46,432,687	**18,387,668**
சேமிப்பு கணக்குகள்- பணிக்கொடை		521,567	**521,567**
ஏனைய மொத்த நடைமுறை சொத்துக்கள்		**46,954,254**	**18,909,235**
மொத்த சொத்துக்கள்		**177,631,289**	**80,380,125**
உரிமையாண்மையும் பொறுப்புக்களும்			
உரிமையாண்மை			
திரட்டப்பட்ட மிகைகள்		26,303,316	18,564,910
மொத்த உரிமையாண்மை		**26,303,316**	**18,564,910**
நடைமுறையல்லா பொறுப்புக்கள்			
அரச மானியம்	14	7,334,163	9,225,134
ஓய்வூதிய நன்மைகள் பொறுப்பு	15	890,419	521,567
மொத்த நடைமுறையல்லா பொறுப்புக்கள்		**8,224,582**	**9,746,701**

நடைமுறை பொறுப்புக்கள்

நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய மானியம்	**16**	139,358,986	34,650,594
திரட்டப்பட்ட செலவுகள்	**17**	527,093	1,479,581
ஒப்பந்த பொறுப்புக்கள்	**18**	-	4,326,007
அமைச்சின் 'ஐஉரடியவழச' கருத்திட்டம்	**19**	17,313	11,612,332
ஆ.்.ளு புஜணு	**20**	3,200,000	
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்		**143,103,392**	**52,068,514**
மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்		**177,631,289**	**80,380,125**

05 தொடக்கம் 18 வரையான குறிப்புகளடங்கிய பக்கங்கள் நிதியின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.

.....

கணக்காளர்

கையொப்பமிட்டது

.....

திரு. அனு'க குணசிங்க

தலைவர்.். பணிப்பாளர் நாயகம்

ந் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் பணிப்பாளர் சபையே பொறுப்பானதாகும்.

பணிப்பாளர் சபையின் சார்பாக ஒப்புதல் மற்றும் கையொப்பமிடப்பட்டது.

.....

பணிப்பாளர்

திரு. அசங்க விஜேசுந்தர

.....

பணிப்பாளர்

திரு. ஏ. ஹேமசிரி பெரேரா

2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான கூற்று

	திரட்டப்பட்ட மிகை	மொத்தம்
	ரூ.	ரூ
2016 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதியில் மீதி	**2,132,443**	**2,132,443**
ஆண்டின் தேறிய மிகை	.	-
2015 ஆம் ஆண்டின் சீராக்கல்	(1,572,126)	(1,572,126)
2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதி	**560,317**	**560,317**
ஆண்டிற்கான தேறிய மிகை	27,372,346	27,372,346
2017 ஆம் ஆண்டின் சீராக்கல்	(1,629,347)	(1,629,347)
	26,303,316	26,303,316
2017 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் உள		

தலைவர்,

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிக் கட்டளைச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய தினத்தில் முடிவுற்ற வருடத்திற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசு பாய்ச்சற் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிக் கட்டளைச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் இணைத்து வாசிக்கப்படும் இலங்கை சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதிக்கூற்றுக்கள் தாமதமடைவதன் காரணமாக அதிகாரசபையின் கொடுக்கல் வாங்கல் தொடர்பான அறிக்கை 2020 ஜூலை 24 ஆம் திகதி மும்மொழிகளிலும் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

1.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

1.3. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐளுளுயுஐ 1000-1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறி தேவைப்பாட்டிற்கு நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வானது திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் எதிர்பார்க்கின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களுக்குரிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகளில், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்கரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்வதுடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையினையும் பரப்பினையும் நிர்ணயிப்பதற்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிக்கட்டளைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகளின் ஊடாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரமானது வழங்கப்படுகிறது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியனவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் சீர் செய்யப்பட்டிருக்குமேயானால் தொடர்ச்சியாக வரும் நிதிக்கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ள பல அடிப்படை மூலகங்கள் பொருண்மையாக பாதிக்கப்பட்டிருக்கலாம்.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மைத் தன்மையினையும் நியாயத்தன்மையினையும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துக்களை தெரிவித்தல்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

(அ) இ.க.நி 01 :- நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

நியமங்களின் அடிப்படையில், இ.க.நி 08 இல் குறிப்பிடப்பட்டதற்கமைய மீண்டும் பிரசுரிப்பதற்கான தாக்கத்தினை இனங்கண்டுக்கொள்வதற்குரியதாக உரிமையாண்மையில் எல்லா மூலகங்களும் குறிப்பிடப்பட்டு உரிமையாண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆயினும், மீளாய்வாண்டில் டிசம்பர் 31 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட உரிமையாண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் கூற்றில் முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் நிகர வேறுபாடுகளில் மாத்திரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) இ.க.நி. 16 :- ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(i) சொத்தின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலத்தினைக் குறைத்து எல்லா நிதி ஆண்டுகளின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் எதிர்பார்ப்பு நிலைமையொன்றில் மேலே செய்யப்பட்ட மதிப்பீடுகளினூடாக மாற்றம் ஏற்பட்டால் அம்மாற்றம் டுமுயுளு 8 இன் பிரகாரம் கணக்கீட்டு மதிப்பீட்டில் வித்தியாசமாக கருதி கணக்கீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி எழுத்தப்பட்ட இறுதி மீதி ரூ.10இ097இ481 ஆவதுடன் தற்பொழுது பயன்படுத்திக் கொண்டிருக்கும் பொறி உபகரணங்கள், மோட்டார் வாகனம், அலுவலக உபகரணம், தளபாடம் மற்றும் பொருத்துக்கள், நூலகத்திற்கான புத்தகங்கள், கணக்கீட்டு மென்பொருள்கள் மற்றும் கணினிகள் மற்றும் துணைக்கருவிகளின் எஞ்சிய பெறுமதியும் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலமும் மீளாய்வு செய்யப்படாமலிருந்தன.

(ii) முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு ஆனாலும் மேலும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் மோட்டார் வாகனமொன்று, 24 அலுவலக உபகரணங்கள் மற்றும் 49 கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டின் குறைப்பாடுகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) (ை) குறித்த சந்தர்ப்பத்தில் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூ. 46,450,000 நிதி ஒதுக்கீட்டில் ரூ. 46,432,687 செலவிடப்பட்டு மீளாய்வாண்டினுள் மாக்கந்துர கைத்தொழிற்பேட்டையில் பூர்வாங்க தொழில்நுட்ப பரிமாற்றல் மத்திய நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டது. அம் மத்திய நிலையமானது வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றாக கருதி பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் கம்பனியின் பங்கு மூலதனத்தில் நூற்றுக்கு அறுபது (60) வீதமான பங்களிப்பு அதிகார சபைக்கு உரித்துடையதாக காணப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் மத்திய நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூ. 46,432,687 ஆனது அதிகார சபையினால் மேற்குறிப்பிடப்பட்ட கம்பனியில் செய்யப்பட்ட முதலீடாக மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அப் பெறுமதிக்கு சமமான பங்குகள் கம்பனியினால் அதிகாரசபைக்காக ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் முதலீடானது அப் பெறுமதியால் அதிகரித்து காணப்பட்டது.

(ை) அதிகார சபையினால் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது மேற்குறிப்பிடப்பட்ட நிர்வாக கம்பனியின் தகவல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட கம்பனியினால் மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்காமையினால் அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுகளுக்காக செலுத்தப்பட்ட முற்பணங்கள் ரூ. 19,633,940 ஆனது நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானிய கணக்கில் சீர் செய்வதற்கு பதிலாக திரட்டப்பட்ட மிகையில் சீர் செய்யப்பட்டமையினால் திரட்டப்பட்ட மிமையானது அப் பெறுமதியினால் குறைவானவும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மானிய கணக்கின் தொகை அப் பெறுமதியினால் அதிகமாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டினுள் முன் செலுத்தப்பட்ட காப்புறுதி தொகையின் பெறுமதி ரூ. 92,620 ஆக காணப்பட்டாலும், அது ரூ.63,916 ஆக கணக்கிடப்பட்டமையினால் மீளாய்வாண்டில் காப்புறுதிக்கான செலவு ரூ. 28,704 ஆல் அதிகரித்ததுடன் முன் கொண்டு செல்லப்பட்ட

காப்புறுதி தொகையானது அப் பெறுமதியினால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக கணினி மற்றும் துணைக்கருவிகளின் பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூ. 445,042 ஆக காணப்பட்டாலும், அது ரூ. 290,823 ஆக கணக்கிடப்பட்டமையினால் மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூ. 154,219 இனால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(உ) வாடகைக் கட்டிடத்தில் நடாத்திச் செல்லும் அதிகார சபையின் அலுவலக வளாகத்தில் இடம்பெறும் பராமரிப்பு மற்றும் பழுபார்த்தலுக்காக 2014 ஆம் ஆண்டினதும் 2016 ஆம் ஆண்டினதும் முறையே ரூ. 1,280,282 மற்றும் ரூ. 56,250 குரிய செலவு பராமரிப்பு செலவாக கருதி கணக்குகளில் பதிவு செய்யாது இயந்திரமாக கருதி மூலதனமாக பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்குரிய ரூ. 590,892 பெறுமானத்தேய்வு ஒதுக்கப்பட்டிருந்தது. அதனால் ஆண்டிறுதியில் நிலையான சொத்துக்களின் தேறிய தேறத்தக்க பெறுமதி ரூ. 745,640 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) காசுப் பாய்ச்சற் கூற்று தொடர்பாக கீழே குறிப்பிட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் செய்யப்பட்டன.

(ஸ) அதிகாரசபையினால் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்று மற்றும் கணக்காய்வினால் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றுக்குமிடையில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

விபரம்	**அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றுக்கமைவாக**	**கணக்காய்வினால் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சற் கூற்றுக்கமைவாக**	**வேறுபாடுகள்**
	ரூ.	**ரூ.**	**ரூ.**
செயற்பாட்டு நடவடிக்கைகள்	28,288,562	(112,503,769)	(140,792,331)
முதலீட்டு நடவடிக்கைகள்	(47,615,766)	(29,228,098)	18,387,668
நிதி நடவடிக்கைகள்	3,136,805	125,541,469	122,404,664

(ii) ஆண்டில் சீர் செய்யப்பட்ட ரூ. 19,633,940 ஆனது மீளாய்வாண்டின் செயற்பாட்டு மிகையுடன் பொருத்தமின்றி காணப்பட்டது.

(iii) பிற வருமானங்களுள் பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் ரூ. 28,045,019 ஆனது செயற்பாட்டு மிகையுடன் பொருத்தமின்றி காணப்பட்டது.

(iv) நிகழ்ச்சித்திட்டங்களுக்கான நிதி ரீதியான மானியங்கள் நிதி நடவடிக்கைகளின் கீழ் காட்டப்படுவதற்கு பதிலாக செயற்படு மூலதன மாற்றத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(v) ஒப்பந்தத்திற்கான பொறுப்பு குறைப்பு ரூ. 4,326,007 ஆனது காசுப் பாய்ச்சற் கூற்றில் ரூ. 15,921,026 ஆக பதிவளிக்கப்பட்டிருந்தது.

(vi) சீ.ச பி – என்டபிரய்ஸ் நிறுவனத்தில் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுக்கும் முன்னைய வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுக்கும் இடையிலான வேறுபாடு ரூ. 28,045,019 ஆவதுடன், அது காசுப் பாய்ச்சற் கூற்றில் ரூ. 46,432,687 ஆக காட்டப்பட்டிருந்தது.

(vii) மதிப்பாய்வாண்டினுள் பெற்ற மொத்த மானியத்தின் பெறுமதி ரூ. 163,173,110 இல் பயன்படுத்தப்பட்ட மானியம் ரூ. 37,631,641 ஆனது காசுப் பாய்ச்சற் கூற்றில் நிதி செயற்பாட்டின் கீழ் அரசிடமிருந்து கிடைக்கப்பெற்ற மானியமாக ரூ. 3,136,805 மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

2.2.3. பொருத்தப்பாடற்ற நிர்வாகக் கணக்கு.

மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்று காசுப் புத்தக மீதியுடன் பொருத்தப்பாடற்று காணப்பட்டது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதிசார் விளைவு ரூ. 27,372,346 மிகை காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் மிகை ரூ. 18,004,593 ஆக காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவில் ரூ. 9,367,753 அதிகரிப்பொன்றினை காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டில் கைத்தொழில் அமைச்சின் கீழுள்ள கருத்திட்டமொன்றிற்காக பெற்ற மானியத்தின் வருமானத்தில் எழுதப்பட்ட பெறுமதி முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 9,657,351 ஆல் அதிகரித்தமை மேற்குறிப்பிட்ட மிகை அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கம் செலுத்தியது.

3.2 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 ஜூன் மாதம் 02 ஆம் திகதிய பிஈடி.:.12 இலக்கமுடைய அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களையும் வருடாந்த வரைவு அறிக்கையினையும் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2020 டிசம்பர் 21 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

3.3. **கடந்த வருடத்தில் கணக்காய்வாளரின் அறிக்கையில் சிபாரிசு செயற்படுத்தப்படாமை**

கடந்த வருடத்திற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட சிபாரிசு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

டபிள்யூ. பி. சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி